# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 340/மா/2025
நாள் 24.08.2026

நா. முருகவேல்,
சென்னை–600 015. --- முறையீட்டு மனுதாரர்

(1) உதவி ஆணையர் (GD & Personnel)
பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை–600 003.

(2) மண்டல அலுவலர், மண்டலம் 1,
பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை–600 10. --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 015, சைதாப்பேட்டை (மேற்கு), வி.ஜி.பி. சாலை, கதவு எண் 140/41 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. நா. முருகவேல் என்பவரின் 28.08.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.08.2025 அன்று பெறப்பட்டு 340/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–600 015, சைதாப்பேட்டை (மேற்கு), வி.ஜி.பி. சாலை, கதவு எண் 140/41 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. நா. முருகவேல் என்பவர் 28.08.2025 நாளிட்ட மனுவுடன் இணைத்தனுப்பியுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமை செயலாளர் மற்றும் ஆணையாளருக்கு முகவரியிட்ட 20.08.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"நான், பெருநகர சென்னை மாநகராட்சியில் 33 ஆண்டு காலம் பணிபுரிந்து இறுதியாக மண்டலம்–1ல் செயற்பொறியாளராக பணிபுரிந்து 29.02.2024 அன்று தணிக்கை தடைகள் மற்றும் முன்பணம் நிலுவை காரணமாக என் மீதான ஒழுங்கு நடவடிக்கை குந்தகம் இன்றி வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளேன்.

இது தொடர்பான ஒழுங்கு நடவடிக்கையால் விதி 17(b)ன்படி குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தி விளக்கம் கோரப்பட்டு, அதற்குரிய விளக்கம் சமர்ப்பித்து இருந்தேன். அதனை தொடர்ந்து விசாரணை அலுவலர் அறிக்கையின் மீது எனது கூடுதல் விளக்கம் சமர்ப்பித்திருந்தேன். ஆனால் இந்நிகழ்வில் இறுதி ஆணை வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது.

இது தொடர்பாக நான் ஓய்வு பெற்று 18 மாதங்கள் கடந்துள்ள நிலையில், எனது குடும்ப வாழ்வாதாரம், கருதி எனக்கு தற்காலிக ஓய்வு ஊதியம் வழங்க வேண்டி மனு சமர்ப்பித்து உள்ளேன்.

ஆனால் இதுநாள் வரை எவ்வித நடவடிக்கையும் சரிவர மேற்கொள்ளாமல், என் மீதான தணிக்கை தடை மற்றும் முன்பணம் நிலுவை ரூ.49,23,942/– தீர்வு செய்யப்படாமல் உள்ளதாகவும், அத்தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கில் செலுத்தினால் மட்டுமே, தற்காலிக ஓய்வு ஊதியம், ஓய்வு ஊதியம்/ இதரப் பணப் பயன்கள் வழங்குவது குறித்து பின்னர் பரிசீலிக்கப்படும் எனவும், மேற்காணும் தொகையினை செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நான் ஓய்வு பெற்று 20 மாதங்களுக்கு மேலாக கடந்த நிலையில் இது வரை எனக்கு எவ்வித ஓய்வு கால பணப்பயன்களும் தீர்வு செய்யப்படாமல், எனது வாழ்வாதாரத்திற்கு எவ்வித பணப்பயன்களும் விடுவிக்காமல் சிரமப்படும் சூழ்நிலையில் முதுநிலை கணக்கு அலுவலர் ஓய்வு ஆணையாளர் அவர்களுக்கு சமர்ப்பித்த தற்காலிக ஓய்வூதியம் பரிந்துரை கடிதத்தில் முன்பணம் மற்றும் தணிக்கை தடை நிலுவை ரூ.49,23,942/– மாநகராட்சி கருவூலத்தில் செலுத்த சொல்வது முரண்பாடான கருத்தாக பதிவு செய்யப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக நான் தங்களது மேலான பார்வைக்கு சமர்ப்பித்து கொள்வது யாதெனில், நான், பணியில் இருக்கும் சமயத்திலேயே பெறப்பட்ட முன்பணத் தொகை மற்றும் தணிக்கை தடை நிலுவையில் பெரும்பாலவற்றை தீர்வு செய்து விட்டேன். விசாரணை அலுவலர் அவர்களுக்கு உரிய ஆவணங்களுடன் சமர்ப்பித்தும் தீர்வு செய்யப்பட்ட தொகை விபரத்தினை கருத்தில் எடுத்துக் கொள்ளவில்லை எனவும் பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

| முன்பண தொகை பெறப்பட்டது | | தீர்வு செய்யப்பட்ட தொகை | தீர்வு செய்யப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|
| கோவிட்–19 | – 48,22,285 | 47,78,625 | 43,660 |
| தணிக்கை தடை | – 1,01,657 | 74,232 | 27,425 |
| Total | 49,23,942 | 48,52,857 | 71,085 |

மேற்காணும் என் மீதான மொத்த முன்பணம் மற்றும் தணிக்கைத் தடை நிலுவை தொகையில் 85% தீர்வு செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் 15% கீழான தொகை ரூ.71,085/– மட்டும் நிலுவையில் உள்ளது.

மேலும் ஈட்டிய மற்றும் ஈட்டா விடுப்பு ஒப்படைப்பு பணப்பயன்கள் பற்றி அரசாணை (நிலை) எண் 300 மனித வள மேலாண்மை துறை நாள் 07.04.2022 கீழ்கண்டுள்ளவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"Provided that the Government servants who are dismissed or removed from services or who have resigned from service shall not eligible for encashment of earned leave and leave on private affairs:

Provided further that the encashment of earned leave and leave on private affairs shall be deferred to the Government servants who are not permitted to retire from service under Fundamental Rule Superannuation but retained in service under Fundamental Rule 56(1)(c), till the enquiry into the charge of misconduct or criminal misconduct is/are concluded and final order passed thereon by the competent authority. The said benefit of encashment of earned

leave and leave on private affairs shall be drawn and disbursed to such Government servants after regulating their suspension period."

மேற்குறிப்பிட்டுள்ள உத்தரவின்படி பணிநீக்கம் செய்யப்பட்டு குற்றச்சாட்டு விளக்கம் பெறப்பட்டு பணிநீக்க காலம் வரைமுறை செய்யப்பட்ட பிறகு விடுப்பு கால பணப்பயன்கள் வழங்குவது பற்றி பரிசீலனைக்கு எடுத்து கொள்ள கருத்துரு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஆணையின் கீழ் எனக்கு பொருத்தமாகவும் உள்ளது. எனவே எனக்கு உரிய விடுப்பு கால பணப்பயன்கள் வழங்கிடவும் மற்றும்.

ஒய்வு ஊதிய பணப்பயன்கள் வழங்குவது சம்பந்தமாக தமிழ்நாடு ஒய்வு ஊதிய விதிகள் விதி 1979, 9(4) விதியின் கீழ்கண்டுள்ளவாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"9. Right of Government to withhold or withdraw pension:- 4) In the case of a Government servant who has retired on attaining the age of superannuation or otherwise and against whom any departmental proceedings are continued under sub-rule (2) (or any enquiry is being conducted by the Director of Vigilance and Anti-Corruption), a provisional pension as provided in rule 60 rule 69 as the case may be, shall be sanctioned."

என குறிப்பிட்டுள்ளதால் எனக்கு (Provisional Pensions) தற்காலிக ஓய்வு ஊதியம், நிரந்தர ஓய்வு ஊதியத்திற்கு மிகாமல் வழங்குவதற்கு உரிய வழிகாட்டி முறையில் குறிப்பிட்டுள்ளது. எனவே, எனக்கு நேர்வு செய்யப்படவுள்ள ஓய்வு கால பணப்பயன்களாகிய பணிக்கொடை, ஓய்வூதியம், தொகுப்பு தொகை மற்றும் ஈட்டிய விடுப்பு, ஈட்டா விடுப்பு, ஒப்படைப்பு தொகை என தேர்வு செய்யப்படாமல் நிலுவையில் உள்ள நிலையில், தொகையில் சுமார் ரூபாய் 60 லட்சத்தில் 10% வீதம் தொகை மட்டும் (ரூ.74,085/–) தணிக்கை தடை மற்றும் முன்பண நிலுவை தொகையாக உள்ளது. மேற்படி தொகை நேர் செய்வதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எனவே எனக்கு வழங்கப்பட வேண்டிய ஒய்வூதியம், ஈட்டிய விடுப்பு மற்றும் ஈட்டா விடுப்பு, பணிக்கொடை ஆகியவற்றைச் சார்ந்த பணப்பயன்கள் உரிய காலங்களில் கிடைத்திட உத்திரவு வழங்கிடும்படி பணிவுன் கேட்டுக் கொள்கிறோம்."

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 03.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1ன் மண்டல அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, தலைமையகம்–உதவி ஆணையர் (GD & Personnel) ஆகியோரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையர் (பொ) தனது 24.10.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 1 அலுவலக இணை இயக்குநர் / மண்டல அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி திரு. N. முருகவேல், செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்களுக்கு பொது வருங்கால வைப்பு நிதியிலிருந்து 90% தொகையாக ரூ.7,56,730/–னை விடுவிக்கப்பட்டது.

கூடுதல் தலைமை செயலர்/ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் குற்றச்சாட்டு குறிப்பாணையின்படி திரு. N. முருகவேல், செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்களை பொறுப்பாக்கிய தணிக்கை தடை பத்திகள் சார்ந்த தொகை மற்றும் அலுவலக சார்ந்த முன்பணத் தொகை ரூ.49,23,942/– ஆகிய வை நேர் செய்யப்படாமல் நிலுவையில் இருந்ததால் தனியர் மீது சுமத்தப்பட்ட துறை ரீதியான ஒழுங்கு

நடவடிக்கையாக தமிழ்நாடு குடிமை பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 17(b)ன் கீழ் குற்றச்சாட்டு குறிப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

அரசாணை மற்றும் கூடுதல் தலைமை செயலர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் செயல்முறை ஆணையின்படி, திரு. N. முருகவேல், செயற்பொறியாளர் அவர்களை 29.02.2024 அன்று பிற்பகல் வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஒய்வு பெற அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின்படி தனியரை பொறுப்பாக்கிய தணிக்கை தடை பத்திகள் சார்ந்த தொகை மற்றும் அலுவலக சார்ந்த முன்பணத்தொகை ரூ.49,23,942/– ஆகியவை நேர் செய்யப்படாமல் நிலுவையில் இருந்ததால், தனியர் மீது சுமத்தப்பட்ட துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை 17(b), தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978–ல் விதி எண் 9ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள முறைகளின்படி தொடரும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் 2022–2023 மற்றும் 2023–2024 ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படாத நிலையில், அவை வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கைத் தடை பத்திகள் / முன்பண தொகைகள் ஏதேனும் தனியரை சார்ந்தது என்பது தெரியவரும் பட்சத்தில், அதற்கும் தனியரை முழு பொறுப்பாக்கி, தனியருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஒய்வூதிய பணப்பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், திரு. N. முருகவேல், செயற்பொறியாளர் அவர்களை 29.02.2024 அன்று பிற்பகல் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியிலிருந்து விடுவித்து ஆணை வழங்கப்பட்டது.

கூடுதல் தலைமை செயலர்/ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் செயல்முறை ஆணையின்படி, திரு. N. முருகவேல், செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு விளக்கம் அளிக்கப்பட்டதின்படி, இதன்மீது விசாரணை அலுவலராக திரு. C.A. பாலமுரளி, கண்காணிப்பு பொறியாளர், திடக்கழிவு மேலாண்மை மற்றும் பேருந்து வழி சாலை துறை, பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களை நியமித்து ஆணையிடப்பட்டது.

விசாரணை அலுவலர்/கண்காணிப்பு பொறியாளர், பேருந்து சாலை துறை, பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் கடிதத்தின்படி திரு. N. முருகவேல், செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையின்படி தொடரப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கையில் நேர்முக விசாரணை மேற்கொள்ள கடந்த 27.03.2024 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு கீழ் கையொப்பமிட்டுள்ள விசாரணை அலுவலர் முன் உரிய ஆவணங்களுடன் விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்துள்ளார்.

மேலும், திரு. N. முருகவேல், செயற்பொறியாளர் (ஓய்வு) மீதான குற்றச்சாட்டுகள் குறித்து 27.03.2024 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இதனை தொடர்ந்து மீண்டும் விசாரணை மேற்கொள்ள 30.04.2024 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு கீழ் கையொப்பமிட்டுள்ள விசாரணை அலுவலர் முன் உரிய ஆவணங்களுடன் விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்துள்ளார்.

உதவி ஆணையர் (பொ.ந.ம.ப.), பொதுத் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் குறிப்பாணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1ல் செயற்பொறியாளராக பணிபுரிந்த தாங்கள் தனது பணிக்காலத்தில் நிலுவையில் இருந்த தணிக்கை தடைகள் மற்றும் முன்பண நிலுவைத் தொகை ரூ.49,23,942/– நேர்செய்ய நடவடிக்கை எடுக்காதது தொடர்பாக தங்களை பொறுப்பாக்கி, தங்கள் மீது தமிழ்நாடு குடிமுறை அரசுப் பணிகள் (ஒழுங்கு முறையும் மேல்முறையீடுகளும்) விதிகள் துணை விதி 17(b) ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு, ஒழுங்கு நடவடிக்கை விதிமுறைகளின்படி விசாரணை அலுவலராக திரு. C.A. பாலமுரளி, கண்காணிப்பு பொறியாளர், பேருந்து சாலை துறை, பெருநகர சென்னை மாநகராட்சி அவர்கள் நியமிக்கப்பட்டு விசாரணை

மேற்கொள்ளப்பட்டது. விசாரணை அலுவலர் தனது விசாரணை அறிக்கையை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.

| வ. எண் | குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் | விசாரணை அலுவலரின் அறிக்கை |
|---|---|---|
| 1 | திரு. N. முருகவேல்,<br>செயற்பொறியாளர் (29.02.2024 அன்று ஓய்வு) | குற்றச்சாட்டு 1 நிரூபணமாகிறது.<br>குற்றச்சாட்டு 2 பகுதி நிரூபணமாகிறது.<br>குற்றச்சாட்டு 3 நிரூபணமாகிறது.<br>குற்றச்சாட்டு 4 நிரூபணமாகிறது. |

எனவே, விசாரணை அலுவலர் அளித்துள்ள விசாரணை அறிக்கையின் மீது தங்களின் கூடுதல் விளக்கத்தினை இக்குறிப்பாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. தவறும்பட்சத்தில் ஒழுங்கு நடவடிக்கை விதிமுறைகளின்படி உரிய மேல்நடவடிக்கை தொடரப்படும் என தெரிவிக்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலக இணை இயக்குநர்/ மண்டல அலுவலர் 1 அவர்களின் கடிதத்தின்படி திரு. N. முருகவேல், செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்களுக்கு 240 நாட்கள் ஈட்டிய விடுப்பு மற்றும் 180 நாட்களில் 90 நாட்களுக்கு சொந்த அலுவல் காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு சேர்த்து தேர்ச்சி செய்ய வேண்டிய மொத்த தொகை ரூ.16,05,996/– வழங்க வட்டார துணை ஆணையாளர் (வடக்கு) அவர்களின் ஆணை வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

உதவி ஆணையர் (பொ.நி.ம.ப.), பொதுத் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் கடிதத்தின்படி, திரு. N. முருகவேல், செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்களின் கூடுதல் விளக்கம் அளித்ததின்படி தெரிவிப்பது யாதெனில், பெருநகர சென்னை மாநகராட்சி. மண்டலம் 1–ல் பணிபுரிந்த தனியர் பணிக்காலத்தில் அன்னார் மீது நிலுவையில் இருந்த தணிக்கை தடைகள் மற்றும் முன்பணத் நிலுவைத் தொகை ரூ.49,23,942/– நேர் செய்ய நடவடிக்கை எடுக்காதது தொடர்பாக தனியர் மீது தமிழ்நாடு குடிமுறை அரசுப் பணிகள் (ஒழுங்குமுறையும் மேல்முறையீடுகளும்) விதிகள், துணை விதி 17(b)ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு விளக்கம் பெறப்பட்டு, ஒழுங்கு நடவடிக்கை விதிகளின்படி, விசாரணை அலுவலர் நியமனம் செய்து, விசாரணை அலுவலர் அவர்களின் விசாரணை அறிக்கையில் தனியர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபணமாகிறது/பகுதி நிரூபணமாகிறது என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, விசாரணை அறிக்கையின் மீது தனியரிடமிருந்து பெறப்பட்ட கூடுதல் விளக்கத்தினை கூர்ந்தாய்வு செய்ததில், தனியர் ரூ.41,932/–க்கான தணிக்கை தடை மட்டுமே நேர்செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.48,82,010/–ஐ நேர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிய வருகிறது எனவும், தனியர் மீது நிலுவையில் உள்ள ரூ.48,82,010/–ஐ தணிக்கை தடை மற்றும் முன்பண நிலுவைத் தொகையினை நேர்செய்யும் பட்சத்தில், தங்கள் மீது தமிழ்நாடு குடிமுறை அரசுப் பணிகள் (ஒழுங்கு முறையும் மேல்முறையீடுகளும்) விதிகள் துணை விதி 17(b) ன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கையை முடிவுக்கு கொண்டு வர இயலும் என்கிற விவரம் தனியருக்கு தெரிவிக்கப்பட்டது.

துணை ஆட்சியர் நிர்வாகம் (வடக்கு) பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் கடிதத்தின்படி, முதுநிலை கணக்கு அலுவலர் (ம.க.கு.) அவர்களது குறிப்பில், மண்டலம் 1–ல் செயற்பொறியளராக பணிபுரிந்து 29.02.2024 அன்று வயது முதிர்வு ஓய்வில் சென்ற திரு. N. முருகவேல் (பணியாளர் எண் 170397) என்பவருக்கு ஈட்டிய விடுப்பு மற்றும் சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு ஒப்படைப்பு தொகை தீர்வு செய்து தனியருக்கு வழங்கும் பொருட்டு பெறப்பட்ட கோப்பில் நிதி ஆலோசகர் அவர்களின் 06.09.2024

நாளிட்ட குறிப்பில் e-office (மூலமாக) Green Note–இல் தெரிவித்துள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நிதி ஆலோசகர் அவர்களின் Green Note–இல் அரசு அலுவலர்/ பணியாளருக்கு அதிக பட்சமாக வழங்கப்படும் பணிக்கொடை தொகை ரூ.20,00,000/– ஆகும். இத்தொகையை விட தனியரை பொறுப்பாக்கும் நிலுவை தொகை ரூ.49,12,942/– அதிகமாக உள்ளதால், தனியர் தணிக்கைத் தடை பத்தி நீக்கம் செய்யாத பட்சத்தில், மேற்கண்ட செயல்முறை ஆணையின்படி, தனியரின் பணிக்கொடை மற்றும் ஒய்வூதிய பணப்பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும். எனவே தனியரை பொறுப்பாக்கும் முன்பண நிலுவைகள் (மற்றும்) தணிக்கை பத்திகள் நீக்கம் செய்த பின்னரே தனியரின் ஈட்டிய விடுப்பு (ம) சொந்த அலுவல் பேரிலான ஈட்டா விடுப்பு கோப்பின் மீது நடவடிக்கை எடுக்க இயலும்.

மேலும், 2022–2023ம் ஆண்டிற்கான தணிக்கை தடை அறிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை பத்தியின் விவரங்களை உள்ளடக்கியும் 2023–2024க்கான ஆண்டிற்கு உடன் நிகழ்வு சான்று பெற்றும் கோப்பில் இணைக்கப்பட வேண்டும்.

மேலும் தனியரின் இறுதி ஊதியத்தின் சரிதன்மையை உறுதி செய்யும் பொருட்டு உள்ளாட்சி நிதி தணிக்கையின் சான்று பெற்று கோப்பில் இணைக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட இனங்களை சரி செய்து மீள சமர்ப்பிக்கும்பட்சத்தில் ஈட்டிய விடுப்பு (ம) சொந்த அலுவல் பேரிலான ஈட்டா விடுப்பு தீர்வு செய்து தனியருக்கு வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலக மாவட்ட வருவாய் / மண்டல அலுவலர் 1 (பொ)அவர்களின் கடிதத்தின்படி, மேற்கண்டவாறு நிதி ஆலோசகர் அவர்களின் குறிப்பின்படி சம்பந்தப்பட்ட மண்டல அலுவலர்களுக்கு (மண்டம் 11, 12 (ம) 15) தனியர் பணிபுரிந்த காலத்திற்குண்டான 2022–2023ம் ஆண்டிற்கான தணிக்கைத் தடை அறிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளதால் அதன் அறிக்கையினை பெறவும், மேலும் இணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி தணிக்கை அவர்களுக்கு தனியரின் இறுதி ஊதியத்தின் சரித்தன்மையினை உறுதி செய்யும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி தணிக்கை அவர்களின் கடிதத்தின்படி, தனியரின் பணிப்பதிவேடு சரிபார்க்கப்பட்டு மற்றும் பெரு நகர சென்னை மாநகராட்சி ஆணையர் செ.மு. ஆணை பொ.து. ந.க. எண் ஈ1/4780/2024 நாள் 29.02.2024ன்படி தனியர் மீதான ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் ஒய்வூதிய விதிகளின்படி தொடரும் என்று நிபந்தனைகளுக்குட்பட்டு 29.02.2024 முதல் ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டுள்ளார். தனியர் மீதான ஒழுங்கு நடவடிக்கை இறுதி ஆணை பெறப்பட்டிருப்பின் அதனை பணிப்பதிவேட்டில் பதியப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

மேற்படி இன்று வரை ஒழுங்கு நடவடிக்கை முடிவு பெறாமல் நாளது வரையில் இருந்து வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தனியரின் விண்ணப்பத்தின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 1–ல் செயற்பொறியாளராக பணியாற்றிய 29.02.2024 அன்று முதல் ஒய்வு பெற்றேன் எனவும், இதுவரை எனக்கு வழங்கிட வேண்டிய ஒய்வு கால பணப்பயன்கள் ஏதும் வழங்கப்படாமல் உள்ளது. தற்போது எனது மருத்துவச் செலவுகள் மற்றும் வயது முதிர்ந்த பெற்றோர்களுடன் எனது குடும்பத்தினரையும் கவனித்து வர வேண்டி உள்ளது. எனவே மண்டல அலுவலர் 1

அவர்கள் எனக்கு கிடைத்திட வேண்டிய ஒய்வு ஊதியம் / தற்காலிக ஊதியம் (Provisional Pension) தொகையினை 01.03.2024 முதல் தேதியிட்டு வழங்கிட கோரியுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலக மாவட்ட வருவாய்/மண்டல அலுவலர் 1 அவர்களின் கடிதத்தின்படி, அன்னாருக்கு வழங்க வேண்டிய பொதுவருங்கால வைப்பு நிதியில் உள்ள 10% இருப்பு தொகையினை விடுவிக்கவும், தனியருக்கு வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையின் தற்போதைய நிலையில் விவரத்தினை வழங்க கோரியும் மற்றும் தனியரின் விண்ணப்பத்தின்படி, தற்காலிக ஓய்வூதியம் (Provisional Pension) வழங்குவது குறித்து உதவி ஆணையர் (பொ.ந.ம.ப.) பொதுத் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

உதவி ஆணையர் (பொ.ந.ம.ப.), பொதுத் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் கடிதத்தின்படி, அன்னாரின் மீது நிலுவையில் உள்ள தணிக்கை தடை மற்றும் முன்பணம் ரூ.49,23,942/– தொகையில் ரூ.41,932/– தொகை நேர் செய்யப்பட்டுள்ளது என்றும், மீதமுள்ள ரூ.48,82,010/– தொகையை நேர்செய்யும்பட்சத்தில், மேற்படி அலுவலர் மீது தமிழ்நாடு குடிமுறை அரசுப் பணிகள் (ஒழுங்குமுறையும் மேல்முறையீடுகளும்) விதிகள், துணை விதி 17(b)ன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கையை முடிவுக்கு கொண்டு வர இயலும் என மண்டல அலுவலர் 1 மூலமாக தனியருக்கு ஏற்கனவே 28.08.2024 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் தனியருக்கு ஓய்வூதிய பணப்பயன்களான பொது வருங்கால வைப்புநிதி (General Provident Fund) மட்டும் விதிகளின்படி, தனியருக்கு வழங்க இயலும் எனவும் தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள் 1978, 9(4) விதியில் கீழ்கண்டுள்ளவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

> "9. Right of Government to withhold or withdraw pension:- 4) In the case of a Government servant who has retired on attaining the age of superannuation or otherwise and against whom any departmental proceedings are continued under sub-rule (2) (or any enquiry is being conducted by the Director of Vigilance and Anti-Corruption), a provisional pension as provided in rule 60 rule 69 as the case may be, shall be sanctioned."

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள் 1978, 9(4) விதியின்படி, தனியருக்கு ஓய்வூதிய மிகாமல் (Provisional Pension) வழங்குவது குறித்து ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று வழங்குமாறும், மேலும் தனியருக்கு பொது வருங்கால வைப்பு நிதி (General Provident Fund) விதிகளின்படி, வழங்க மேல்நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலக உதவி ஆணையர்/மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் கடிதத்தின்படி, இத்தனியருக்கு தமிழ்நாடு ஒய்வூதிய விதிகள் 1978, 9(4) விதிகளின்படி, தனியருக்கு ஓய்வு ஊதியத்திற்கு மிகாமல் தற்காலிக ஓய்வூதியம் (Provisional Pension) வழங்குவது குறித்து ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று வழங்குமாறு உதவி ஆணையர் (பொ.நி.ம.ப.) அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தற்காலிக ஓய்வூதியம் வழங்க முதுநிலை கணக்கு அலுவலர் மண்டலம்–1 அவர்களின் கருத்துருவின்படி, கீழ்க்கண்டவாறு தனியரின் தற்காலிக ஓய்வூதிய கணக்கீடு விவரம் தெரிவிக்கப்பட்டது:–

| | |
|---|---|
| பெயர் | என். முருகவேல் |
| பணி எண் | 170397 |
| பதவி | செயற்பொறியாளர், மண்டலம்–1 |
| ஒய்வு நாள் | நா. மா. வருடம்<br>29 02 2024 |
| முதன் முதலில் நிரந்தர பணியில் சேர்ந்த நாள் மற்றும் பதவி (இளநிலை பொறியாளர்) | நா. மா. வருடம்<br>08 04 1993 |
| மொத்த பணிகாலம் | நா. மா. வருடம்<br>21 10 30<br>அல்லது 61 அரையாண்டுகள் வரையறுக்கப் பட்ட காலம் 60 அரை ஆண்டுகள் |
| ஒய்வு பெறும் நாளன்று 29.02.2024 அன்று பெற்று வந்த ஊதியம் | ரூ.92000/– (Level 25, No.16)<br>59300 – 217600 |
| ஒய்வு ஊதியம் | ரூ.92,000 x 60 = ரூ.46200/–<br>2 x 60 |
| ஒய்வு ஊதியத்திற்கு மிகாமல் வழங்கப்பட வேண்டிய தற்காலிக ஒய்வு ஊதியம் | ரூ.46200/– |

திரு. என். முருகவேல், செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்களுக்கு தற்காலிக ஓய்வூதியம் (Provisional Pension) வழங்க ஆணையாளர் அவர்களின் ஆணை வேண்டி வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் மூலமாக கடிதம் அனுப்பப்பட்டது.

துணை ஆட்சியர் (நிர்வாகம்), பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார அலுவலகம் அவர்களின் கடிதத்தின்படி, தனியருக்கு ஓய்வூதியத்திற்கு மிகாமல் தற்காலிக ஓய்வூதியம் வழங்க பொதுத்துறை (ஓய்வூதியம்) பிரிவிற்கு பணிப்பதிவேடு மற்றும் கோப்பு அனுப்பப்பட்டது.

மேற்கண்ட பொருள் சார்ந்து தனியருக்கான ஒழுங்கு நடவடிக்கை முடிவு பெறாமல் நாளது வரையில் இருந்து வருகிறது. தனியர், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு திருப்பி செலுத்த வேண்டிய தணிக்கை தடை மற்றும் முன்பண தொகை ரூ.49,23,942/–. ஆகவே தனியருக்கு வழங்கப்படவேண்டிய பணப்பயன்களான தற்காலிக ஓய்வூதியம் உட்பட மேலே குறிப்பிடப்பட்ட தீர்வு செய்யப்படாமல் உள்ள ரூ.49,23,942/–ஐ திரு. என். முருகவேல், செயற்பொறியாளர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கில் செலுத்த முதற்கண் தனியருக்கு அறிவுறுத்தப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு தனியர் தீர்வு செய்யப்படாமல் உள்ள ரூ.49,23,942/–ஐ பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கில் செலுத்திய பின்னர் தனியர் கோரியுள்ள தற்காலிக ஓய்வூதியம் / ஓய்வூதியம் / இதர பணப்பயன்கள் யாவும் வழங்குவது குறித்து பின்னர் பரிசீலிக்கலாம் என முதுநிலை கணக்கு அலுவலர் (ஓய்வூதியம்) அவர்களின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

தனியரது விண்ணப்பத்தின்படி, தற்சமயம் மொத்த முன்பணம் மற்றும் தணிக்கைத் தடை நிலுவை தொகையில் ரூ.49,23,942/–ல் 85% தீர்வு செய்யப்பட்டுள்ளதாகவும் தற்சமயம் 15% தொகை ரூ.71,085/– மட்டும் நிலுவையில் உள்ளதாகவும், இத்தொகையினை நேர் செய்வதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலக உதவி ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி, மேற்கண்ட தனியரின் கடிதத்தில் தெரிவித்துள்ள விவரத்தினை பரிசீலினை செய்கையில் அதன்படி தற்சமயம் தனியர் மீதான மொத்தமுள்ள முன்பணம் மற்றும் தணிக்கை தடை நிலுவைத் தொகை ரூ.49,23,942/–ல் கோப்பில் உள்ளவிவரப்படி கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. அதன் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | தணிக்கைத் தடை பத்தி நிலுவை விவரம் | பத்தி எண் | தொகை | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | 2016–17 / மண்டலம்–1 | 26 | ரூ.41,932/– | திரு. N. முருகவேல், செயற்பொறியாளர் பொறுப்பு நீக்கம் செய்யப்பட்டுள்ளது |
| 2. | 2017–18 / மண்டலம்–8 | 19 | ரூ.24,500/– | பத்தி நீக்கம் செய்யப்பட்டுள்ளது |
| 3. | 2021–22 / மண்டலம்–15 | 28 (ii) | ரூ. 3,690/– | நிலுவை |
| 4. | 2021–22 / மண்டலம்–15 | 29 (ii) | ரூ. 7,800/– | பத்தி நீக்கம் செய்யப்பட்டுள்ளது |
| 5. | 2021–22 / மண்டலம்–15 | 31 (ii) | ரூ.23,735/– | நிலுவை |
| | தற்போதைய தணிக்கைத் தடை மொத்த நிலுவை தொகை | | ரூ.27,425/– | |

மேலும் தனியர் செயற்பொறியாளராக மண்டலம் 11ல் பணிபுரியும் போது பெறப்பட்ட முன்பண நிலுவை விவரம்:-

| செலவுச் சீட்டு எண் | நாள் | பெறப்பட்ட முன்பணம் | ஈடுசெய்யப்பட்ட விவரம் | நிலுவையுள்ள முன்பணம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 20537 | 12.07.2019 | ரூ. 43,600/– | – | ரூ. 43,600/– |
| 4923 | 18.05.2020 | ரூ.15,00,000/– | – | ரூ.15,00,000/– |
| 4915 | 18.05.2020 | ரூ. 8,00,000/– | ரூ.8,00,000/– (29.02.2024–ல் நேர் செய்யப்பட்டுள்ளது) | இல்லை |
| 11038 | 25.06.2020 | ரூ. 4,00,000/– | ரூ.4,00,000/– (29.02.2024–ல் நேர் செய்யப்பட்டுள்ளது) | இல்லை |
| 16316 | 31.07.2020 | ரூ. 92,000/– | ரூ.92,000/– (29.02.2024–ல் நேர் செய்யப்பட்டுள்ளது) | இல்லை |
| 17752 | 10.08.2020 | ரூ. 2,50,000/– | ரூ.2,50,000/– (29.02.2024–ல் நேர் செய்யப்பட்டுள்ளது) | இல்லை |
| 17822 | 10.08.2020 | ரூ. 61,589/– | ரூ.61,589/– (29.02.2024–ல் நேர் செய்யப்பட்டுள்ளது) | இல்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| 17777 | 10.08.2020 | ரூ. 1,46,000/– | ரூ.1,46,000/– (29.02.2024–ல் நேர் செய்யப்பட்டுள்ளது) | இல்லை |
| 17776 | 10.08.2020 | ரூ. 2,94,000/– | ரூ.2,94,000/– (29.02.2024–ல் நேர் செய்யப்பட்டுள்ளது) | இல்லை |
| 21055 | 01.09.2020 | ரூ. 50,432/– | ரூ.50,432/– (29.02.2024–ல் நேர் செய்யப்பட்டுள்ளது) | இல்லை |
| 21059 | 01.09.2020 | ரூ.10,33,948/– | | ரூ.10,33,948/– |
| 21058 | 01.09.2020 | ரூ. 3,00,600/– | ரூ.3,00,600/– (29.02.2024–ல் நேர் செய்யப்பட்டுள்ளது) | இல்லை |
| 21057 | 01.09.2020 | ரூ. 8,84,004/– | ரூ.8,84,004/– (29.02.2024–ல் நேர் செய்யப்பட்டுள்ளது) | இல்லை |
| தற்போதைய முன்பண மொத்த நிலுவை தொகை | | | | ரூ.25,77,548/– |

மேற்படி திரு. என். முருகவேல் செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்களை பொறுப்பாகிய தணிக்கைத்தடை பத்திகள் சார்ந்த தொகை ரூ.27,425/–ம் மற்றும் அலுவலக சார்ந்த முன்பணத் தொகை ரூ.25,77,548/– ஆகியவைகள் கோப்பின்படி தற்போதைய நிலுவை தொகை ரூ.26,04,973/– நேர் செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது. மேலும் இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் மூலம் சம்பந்தப்பட்ட மண்டல அலுவலகத்திற்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் தனியர் ஓய்வு பெறப்படும்போது உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் 2022–23 (ம) 2023–24 ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கை வெளியிடப்படாத நிலையில் அதனை தற்போது அனைத்து மண்டலங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையினால் 2022–23 (ம) 2023–24 தணிக்கை அறிக்கை வெளியிடப்பட்டதால் கீழ்க்கண்டவாறு அதன் விவரம் வருமாறு:–

| வ. எண். | பதவி / துறை | பணிபுரிந்த காலம் | தற்போது நிலுவையிலுள்ள தணிக்கைப் பத்திகள் |
|---|---|---|---|
| 1. | உதவி செயற்பொறியாளர் (ம) செயற்பொறியாளர் மண்டலம் 1 | 27.12.2016 முதல் 28.05.2017 வரை மற்றும் 17.11.2023 முதல் 29.02.2024 வரை | 2017–18 (6அ, 6ஆ, 7அ, 7ஆ 49) 2023–24 (44, 45, 47) |
| 2. | உதவி செயற்பொறியாளர் மண்டலம் 15 | 02.08.2021 முதல் 08.02.2023 வரை | 2021–22 (28 (ii), 31 (ii) மற்றும் 69 (ii)) |
| 3. | செயற்பொறியாளர் மண்டலம் 12 | 08.02.2023 முதல் 16.05.2023 வரை | 2022–23 மற்றும் 2023–24 பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 அலுவலக கடிதம் மூலம் உதவி ஆணையர், மண்டலம் |

| | | | |
|---|---|---|---|
| | | | 12 அவர்களுக்கு தணிக்கைத் தடை பத்திகள் குறித்து கடிதம் அனுப்பப் பட்டுள்ளது |
| 4. | செயற்பொறியாளர் மண்டலம் 8 | 16.05.2023 முதல் 17.10.2023 வரை | 2023–24 பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 அலுவலக கடிதம் மூலம் உதவி ஆணையர், மண்டலம் 8 அவர்களுக்கு தணிக்கைத் தடை பத்திகள் குறித்து கடிதம் அனுப்பப் பட்டுள்ளது |

மேற்படி திரு. என். முருகவேல், செயற்பொறியாளர் (ஓய்வு) மீதான தணிக்கைத் தடை பத்திகள் மற்றும் அலுவலக சார்ந்த முன்பணத் தொகை தற்போது நிலவரப்படி தொகை ரூ.26,04,973/– நேர் செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது. (இதில் 2022–23 மற்றும் 2023–24 மண்டலம் 8 மற்றும் மண்டலம் 12 லிருந்து தனியர் பணிபுரிந்த காலத்தில் தணிக்கை தடை பத்தி நிலுவை குறித்து விவரம் பெற வேண்டி இருப்பதால் அதனை நீங்கலாக) இதன் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, 9(4) விதியின்படி, தனியருக்கு ஓய்வூதிய மிகாமல் (Provisional Pension) வழங்குவது குறித்து மறு பரிசீலனை செய்து வழங்குமாறு ஆணையாளர் அவர்களின் ஆணை வேண்டி வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களின் அறிவிப்பு கடிதத்தின்படி, மேற்கண்டவாறு விரிவான அறிக்கை மற்றும் அதற்குரிய ஆவணங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

4. மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 23.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 15.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையர் (பொ) தனது 22.06.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தற்போதைய அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

“03.10.2025 நாளிட்ட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களின் அறிவிப்பு கடிதத்தின்படி, 24.10.2025 நாளிட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1, உதவி ஆணையர் (பொ)–ன் கடிதத்தில் ஏற்கனவே விரிவான அறிக்கை தங்களுக்கு அனுப்பப்பட்டு மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, 12.09.2025 நாளிட்ட பெருநகரசென்னை மாநகராட்சி மண்டலம் 1, உதவி ஆணையர் (பொ)–ன் கடிதத்தின்படி, தனியருக்கு தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 – 9(4) விதியின்படி, தனியருக்கு ஓய்வூதிய மிகாமல் வழங்குவது குறித்து ஆணை வேண்டி வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கடிதம் அனுப்பப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் 21.01.2026 நாளிட்ட ஆணையின்படி தனியரால் நேர் செய்யப்படாமல் நிலுவையில் உள்ள முன்பண தொகை ரூ.25,77,548/– தனியருக்கு அளிக்கப்பட வேண்டிய பணிக்கொடை சுமார் ரூ.20.00 இலட்சத்திற்கு மேல் உள்ளதால் தனியருக்ககான தற்காலிக ஓய்வூதியத்தை 01.08.2025 முதல் ஓய்வூதியத்தில் 1/3rd சதவீதம் வழங்கலாம் என ஆணையிடப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (வ(ம)நி) அவர்களின் 23.02.2026 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, ஆணையர் அவர்களது 21.01.2026 நாளிட்ட ஆணையின்படி தனியருக்கு மாதம் ரூ.30,800/– வீதம் 01.08.2025 முதல் 31.01.2026 வரையிலான காலத்திற்கு நிலுவை தொகை ரூ.2,93,784/– மற்றும் 01.02.2026 முதல் ஒரு வருட காலத்திற்கு தற்காலிக ஓய்வூதியம் அனுமதித்து ஆணையிடப்பட்டது.

திரு. N. முருகவேல், செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்களின் 03.03.2026 நாளிட்ட கடிதத்தின்படி, தனது பணிக்காலங்களில் கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு தொகை 240 நாட்கள் மற்றும் சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு ஒப்படைப்பு தொகை 90 நாட்கள் ஆகியவற்றிற்கான தொகையினை வழங்க கோரியுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 உதவி ஆணையர் (முதுநிலை) அவர்களின் குறிப்பின்படி திரு. N. முருகவேல், செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்களுக்கு அரசாணை எண் 47, மனித வள மேலாண்மை (FR.III) துறை நாள் 29.08.2025 மற்றும் அரசு கடித எண் 7399/FR.3 Spl/2025-1 மனித வள மேலாண்மை துறை நாள் 09.10.2025–ன்படி ஓய்வுக்கால பணபயன்களான ஈட்டிய விடுப்பு மற்றும் சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு குறித்து கோப்பு பொதுத் துறைக்கு அனுப்பப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுத் துறை, உதவி ஆணையர் (பொ.நி.ம.ப.) அவர்களின் கடிதத்தின்படி, தனியர் பெருநகர சென்னை மாநகராட்சியில் இளநிலை பொறியாளர் பதவியில் 08.04.1993 அன்று பணியில் சேர்ந்துள்ளார். 27.11.2004 அன்று உதவி பொறியாளராகவும், 30.07.2014 அன்று உதவி செயற்பொறியாளராகவும் பதவி உயர்வு பெற்றுள்ளார். 31.07.2014 அன்று அப்பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. மேலும் 08.02.2023 அன்று செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். அப்பதவியில் 08.02.2023 அன்று பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. தனியர் மண்டலம் 1ல் செயற்பொறியாளராக பணிபுரிந்து வந்த நிலையில் 29.02.2024 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றுள்ளார்.

தனியர் பணியாற்றிய காலங்களில் தனியரை பொறுப்பாக்கிய தணிக்கை தடை பத்திகள் தொகை ரூ.1,01,657/– மற்றும் முன்பணம் நிலுவை தொகை ரூ.48,22,285/– நிலுவையில் இருந்த காரணத்திற்காக, தனியர் மீது தமிழ்நாடு குடிமை பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் விதி 17(b)ன்கீழ் கூடுதல் முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 21.02.2024 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை ஏற்படுத்தப்பட்டது.

அரசாணை (D) எண் 122 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை நாள் 29.02.2024 மற்றும் கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர் அவர்களின் 29.02.2024 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, 2022–2023 மற்றும் 2023–2024ம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர் தணிக்கை தடை பத்திகள் தனியரை சார்ந்தது என பின்னர் தெரிய வரும் பட்சத்தில், அவர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் எனவும், தனியர் பணிபுரிந்த காலங்களில் தணிக்கை தடை பத்திகள் மற்றும் முன்பண நிலுவை தொகை ரூ.49,23,942/– நிலுவையில் இருந்ததால், துறை ரீதியாக தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள் 1978ல் விதி எண் 9ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி தொடரும் எனவும், மேலும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நிதி

இழப்பீடு ஏற்படுத்தும் தணிக்கைத் தடைகள் ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் அல்லது தணிக்கை தடைகளை நீக்க தவறும் நிலையில், அதற்கும் தனியரை பொறுப்பாக்கி அதற்குண்டான தொகையினை தனியரின் இறப்பு ஒய்வு பணிக்கொடையிலிருந்து (DCRG) மற்றும் ஓய்வூதிய பணப்பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரை 29.02.2024 முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

<u>தனியர் மீது தற்போது நிலுவையில் உள்ள தணிக்கை தடை விவரம்</u>

<u>அட்டவணை</u>

| வ. எண் | மண்டலம் | தணிக்கை வருடம் | பத்தி எண் | தணிக்கை தொகை ரூ. | பணியாளர் எண்ணிக்கை | தனி பொறுப்பு ரூ. | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மண்டலம் 1 | 2013–2014 | 50 | | | | |
| 2 | | 2016–2017 | 26 | | | 41,932/– | பொறுப்பு நீக்கம் செய்யப்பட்டது |
| 3 | | 2017–2018 | 6(அ) (ஆ) | – | – | – | |
| 4 | | 2017–2018 | 7(அ) (ஆ) | – | – | – | |
| 5 | மண்டலம் 6 | 2017–2018 | 8 உ, ஊ | | | | |
| 6 | மண்டலம் 8 | 2017–2018 | 19 | | | 24,500/– | பத்தி நீக்கம் செய்யப்பட்டது |
| 7 | மண்டலம் 11 | 2018–2019 | 34 | – | – | – | |
| 8 | | 2020–2021 | 10 | – | – | – | |
| 9 | மண்டலம் 15 | 2021–2022 | 28(i) | 7,380/– | 2 | 3,690/– | |
| 10 | | | 29(i) | | | 7,800/– | பத்தி நீக்கம் செய்யப்பட்டது |
| 11 | | | 31(ii) | 47,470/– | 2 | 23,735/– | |
| 12 | | | 69(ii) | | | | |
| 13 | மண்டலம் 12 | 2022–2023 | 35 வ. எண் 4 & 5 | 3,400/– 1,900/– | 1 | 3,400/– 1,900/– | |
| 14 | மண்டலம் 1 | 2022–2023 | 40 வ. எண் 2 | 2,200/– | 1 | 2,200/– | |
| 15 | மண்டலம் 8 | 2023–2024 | 41 | 26,632/– | 4 | 6,658/– | |
| 16 | | | 65 | – | – | | |
| 17 | மண்டலம் 1 | 2023–2024 | 6அ | 58,057 | 4 | 11,611/– | |
| 18 | | | 44 | – | – | | |
| 19 | | | 45 | – | – | | |
| 20 | | | 47 வ. எண் 5 | 4,200/– | | 4,200/– | |
| மொத்தம் | | | | 1,51,239/– | | 57,394/– | |

மேலும், தனியர் செயற்பொறியாளராக மண்டலம் 11ல் பணிபுரியும் போது பெறப்பட்ட முன்பண நிலுவை விவரம்

| வ. எண் | செலவுச் சீட்டு எண் | நாள் | பெறப்பட்ட முன்பணம் | ஈடு செய்யப்பட்ட விவரம் |
|---|---|---|---|---|
| 1 | 20537 | 12.07.2019 | ரூ. 43,600/– | – |
| 2 | 4923 | 18.05.2020 | ரூ.15,00,000/– | – |
| 3 | 4915 | 18.05.2020 | ரூ. 8,00,000/– | ரூ.8,00,000/– (29.02.2024–ல் நேர் செய்யப் பட்டுள்ளது) |
| 4 | 11038 | 25.06.2020 | ரூ. 4,00,000/– | ரூ.4,00,000/– (29.02.2024–ல் நேர் செய்யப்பட்டுள்ளது) |
| 5 | 16316 | 31.07.2020 | ரூ. 92,000/– | ரூ.92,000/– (29.02.2024–ல் நேர் செய்யப்பட்டுள்ளது) |
| 6 | 17752 | 10.08.2020 | ரூ. 2,50,000/– | ரூ.2,50,000/– (29.02.2024–ல் நேர் செய்யப்பட்டுள்ளது) |
| 7 | 17822 | 10.08.2020 | ரூ. 61,589/– | ரூ.61,589/– (29.02.2024–ல் நேர் செய்யப்பட்டுள்ளது) |
| 8 | 17777 | 10.08.2020 | ரூ. 1,46,000/– | ரூ.1,46,000/– (29.02.2024–ல் நேர் செய்யப்பட்டுள்ளது) |
| 9 | 17776 | 10.08.2020 | ரூ. 2,94,000/– | ரூ.2,94,000/– (29.02.2024–ல் நேர் செய்யப்பட்டுள்ளது) |
| 10 | 21055 | 01.09.2020 | ரூ. 50,432/– | ரூ.50,432/– (29.02.2024–ல் நேர் செய்யப்பட்டுள்ளது) |
| 11 | 21059 | 01.09.2020 | ரூ.10,33,948/– | |
| 12 | 21058 | 01.09.2020 | ரூ. 3,00,600/– | ரூ.3,00,600/– (29.02.2024–ல் நேர் செய்யப்பட்டுள்ளது) |
| 13 | 21057 | 01.09.2020 | ரூ. 8,84,004/– | ரூ.8,84,004/– (29.02.2024–ல் நேர் செய்யப்பட்டுள்ளது) |
| தற்போதைய மொத்த நிலுவை தொகை | | | ரூ.25,77,548/– | |

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களது 21.01.2026 நாளிட்ட ஆணையின்படி தனியரால் நேர் செய்யப்படாமல் நிலுவையில் உள்ள முன்பண தொகை ரூ.25,77,548/– தனியருக்கு அளிக்கப்பட வேண்டிய பணிக்கொடை சுமார் ரூ.20.00 இலட்சத்திற்கு மேல் உள்ளதால், தனியருக்கான தற்காலிக ஓய்வூதியத்தை 01.08.2025 முதல் ஓய்வூதியத்தில் 1/3rd சதவீதம் வழங்கலாம் என ஆணையிடப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (வ(ம)நி) அவர்களின் 23.02.2026 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, ஆணையர் அவர்களது 21.01.2026 நாளிட்ட ஆணையின்படி தனியருக்கு மாதம் ரூ.30,800/– வீதம் 01.08.2025 முதல் 31.01.2026 வரையிலான காலத்திற்கு நிலுவை தொகை ரூ.2,93,784/– மற்றும் 01.02.2026 முதல் ஒரு வருட காலத்திற்கு தற்காலிக ஓய்வூதியம் அனுமதித்து ஆணையிடப்பட்டது.

திரு. N. முருகவேல், செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்களின் 03.03.2026 நாளிட்ட கடிதத்தின்படி, தனது பணிக்காலங்களில் கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு தொகை 240 நாட்கள் மற்றும் சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு ஒப்படைப்பு தொகை 90 நாட்கள் ஆகியவற்றிற்கான தொகையினை வழங்க கோரியுள்ளார்.

அரசு கடித எண் 7399/FR.3 Spl/2025-1 மனித வள மேலாண்மை துறை நாள் 09.10.2025–ல் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| Sl. No. | Category of Government Servants | Terminal benefits to be settled on superannuation | | To be settled after the conclusion of the Disciplinary proceedings / Criminal cases | |
|---|---|---|---|---|---|
| | | Pensioners to whom the Tamil Nadu Pension Rules 1978 apply | Government Servant appointed on or after 01/04/2003 | Pensioners to whom the Tamil Nadu Pension Rules 1978 apply | Government Servant appointed on or after 01/04/2003 |
| 1 | Government Servants who are allowed to retire and against whom disciplinary proceedings/ Criminal cases are pending on the date of their superannuation not covered under Sl. No.1 above. | 1. Provisional pension<br>2. GPF<br>3. Gratuity less maximum computed financial loss to the Government and unrecovered Government dues. If any<br>4. Encashment of earned leave and leave on private affairs<br>5. SPF | 1. Employees contribution to the pension account along with interest<br>2. Encashment of earned leave and private affairs<br>3. SPF | 1. Regular Pension<br>2. Commutation of pension | Government contribution to the pension along with interest. |

எனவே, திரு. N. முருகவேல் செயற்பொறியாளர், மண்டலம்–1 29.02.2024 அன்று ஓய்வு பெற்றவருக்கு தற்போது முன்பணம் நிலுவை ரூ.25,77,546/– மற்றும் தணிக்கை தடை தொகை ரூ.57,394/– நிலுவையில் உள்ள நிலையில் தனியரது 03.03.2026 நாளிட்ட கோரிக்கையின்பேரில் அரசு கடித எண் 7399/FR.3 Spl/2025-1 மனித வள மேலாண்மை துறை நாள் 09.10.2025–ன்படி, ஈட்டிய விடுப்பு மற்றும் சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு தொகைகள் வழங்குவது குறித்து நிதி ஆலோசகர் , மத்திய கணக்கு குழுமம், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களுக்கு கருத்துரு கோரப்பட்டது.

நிதி ஆலோசகர், மத்திய கணக்கு குழுமம், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 12.06.2026 நாளிட்ட குறிப்பின்படி, தனியர் ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டும் தனியர் மீது சுமத்தப்பட்ட துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை 17(b) தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள் 1978ல் விதி எண் 9ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி தொடரும் என குறிப்பிடப்பட்டுள்ளதால், மேற்கண்ட அரசு கடிதத்தின்படி, தனியருக்கு ஓய்வு கால பணப்பயன்களான ஈட்டிய விடுப்பு மற்றும் சொந்த அலுவல் பேரிலான ஈட்டா விடுப்பு பெற தகுதியுடையவராகிறார் எனவும், மேற்படி 09.10.2025ம் நாளிட்ட அரசு கடிதத்தில் இணைப்பு–I 2(a)வில் உள்ள ஓய்வூதிய பணப்பயன்கள் பெறுவதற்கு மேற்காணும் தனியர் தகுதியுடையவராகிறார் என்ற குறிப்புடன் பொதுத்துறைக்கு அனுப்பப்பட்டது.

துணை ஆட்சியர் (நிர்வாகம்), பொதுத் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 19.06.2026 நாளிட்ட குறிப்பின்படி, நிதி ஆலோசகர், மத்திய கணக்கு குழுமம் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் கருத்துருவின் மீது மேல் நடவடிக்கை தொடரும் பொருட்டு கோப்பு இம்மண்டலம் 1ற்கு கடந்த 19.06.2026 அன்று பெறப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி உதவி ஆணையர் (முதுநிலை) அவர்களின் 19.06.2026 நாளிட்ட குறிப்பின்படி, தனியருக்கு ஈட்டிய விடுப்பு மற்றும் சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு தொகைகள் விடுவிக்க கணக்கீட்டுத்தாள் தயார் செய்யப்பட்டு, இவ்வலுவலக முதுநிலை கணக்கு அலுவலர், பகுதி கணக்கு குழுமம், மண்டலம்–1 அவர்களின் சரிபார்ப்பு சான்று பெறப்பட்டு இவ்வார இறுதிக்குள் பட்டியல் தொகையினை தனியரின் வங்கி கணக்கிற்கு நேரடியாக RTGS/NEFT மூலம் வரவு வைக்கப்படும் என பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்படி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களின் முறையீட்டு மனுவின்படி மேற்கண்டவாறு விரிவான அறிக்கை மற்றும் அதற்குரிய ஆவணங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

6. மனுதாரர் 23.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"நான், பெருநகர சென்னை மாநகராட்சியில் 33 ஆண்டு காலம் பணிபுரிந்து இறுதியாக மண்டலம்–1ல் செயற் பொறியாளராக பணிபுரிந்து 29.02.2024 அன்று தணிக்கை தடைகள் மற்றும் முன்பணம் நிலுவை காரணமாக என் மீதான ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகம் இன்றி வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டேன்.

என் மீதான ஒழுங்கு நடவடிக்கை விதி 17(b)ன்படி வழங்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக விளக்கம் மற்றும் கூடுதல் விளக்கம் சமர்ப்பித்துள்ளேன். ஆனால் இந்நிகழ்வில் இறுதி ஆணை வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது.

இது தொடர்பாக நான் ஓய்வு பெற்று 29 மாதங்கள் கடந்துள்ள நிலையில், இதுநாள் வரை எவ்வித நடவடிக்கையும் சரிவர மேற்கொள்ளாமல், என் மீதான தணிக்கை தடை மற்றும் முன்பணம் நிலுவை ரூ.49,23,942/– தீர்வு செய்யப்படாமல் உள்ளதாகவும், அத்தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கில் செலுத்தினால் மட்டுமே, தற்காலிக ஓய்வு ஊதியம், இதரப் பணப் பயன்கள் வழங்குவது குறித்து பின்னர் பரிசீலிக்கப்படும் எனவும், மேற்காணும் தொகையினை செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்காணும் முன்பணம் நிலுவைத் தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சியிடம் 2020ம் ஆண்டு எல்லா பட்டியல் ஆவணங்களையும், சமர்ப்பித்துவிட்டேன். தற்போது தெரிவித்துள்ள முன்பணம் நிலுவைத் தொகையான ரூ.58,54,985/– இலட்சத்தில் ரூ.48,21,985/– இலட்சம் தீர்வு செய்யப்பட்டு மீதம் ரூ.10,33,000/– இலட்சம் என்று கணக்கீடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

தற்போது Provisional Pension வழங்குவதற்கு மட்டுமே அனுமதி அளித்துள்ளார்கள். ஆனால் முழு ஓய்வூதியம் பெற தகுதி உடையவன் ஆவேன்.

மேலும் ஈட்டிய மற்றும் ஈட்டா விடுப்பு ஒப்படைப்பு பணப்பயன்கள் வழங்கப்படவில்லை.

எனவே எனக்கு வழங்கப்பட வேண்டிய ஒய்வூதியம், ஈட்டிய விடுப்பு மற்றும் ஈட்டா விடுப்பு, பணிக்கொடை ஆகியவற்றை சார்ந்த பணப்பயன்கள் உடனே வழங்கிட பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

7. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1—ன் கண்காணிப்பாளர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகம், பொதுத் துறை (ஓய்வூதியம்) கண்காணிப்பாளர் ஆகியோர் 23.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:—

“மனுதாரர் மனு மீது பின்வரும் நடவடிக்கை பெருநகர சென்னை மாநகராட்சியால் எடுக்கப்பட்டுள்ளன:—

- திரு. N. முருகவேல், பெருநகர சென்னை மாநகராட்சி, செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்களுக்கு பொது வருங்கால வைப்பு நிதியிலிருந்து 90% தொகையாக ரூ.7,56,730/—னை விடுவிக்கப்பட்டது.
- திரு. N. முருகவேல், செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் மீது தணிக்கை தடை பத்திகள் சார்ந்த தொகை மற்றும் அலுவலக சார்ந்த முன்பணத் தொகை ரூ.49,23,942/— ஆகியவை நேர் செய்யப்படாமல் நிலுவையில் இருந்ததால் தனியர் மீது சுமத்தப்பட்ட துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கையாக தமிழ்நாடு குடிமை பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 17(b)ன் வரையறுக்கப்பட்டுள்ள முறைகளின்படி தொடரும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் 2022—2023 மற்றும் 2023—2024 ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படாத நிலையில், அவை வெளியிடப்பட்ட பின்னர் தான், தணிக்கைத் தடை பத்திகள்/முன்பண தொகைகள் ஏதேனும் தனியரை சார்ந்தது என்பது தெரியவரும் பட்சத்தில், அதற்கும் தனியரை முழு பொறுப்பாக்கி, தனியருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய பணப்பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், திரு. N. முருகவேல், செயற்பொறியாளர் அவர்களை 29.02.2024 அன்று பிற்பகல் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியிலிருந்து விடுவித்து ஆணை வழங்கப்பட்டது.
- மனித வள மேம்பாட்டு துறையின் கடித எண் 7399/FR3 Spl./2025 நாள் 09.10.2025—ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் 21.01.2026 நாளிட்ட ஆணையின்படி தனியரால் நேர்வு செய்யப்படாமல் நிலுவையில் உள்ள முன் பணத் தொகை ரூ.25,77,548/— தனியருக்கு அளிக்கப்பட வேண்டிய பணிக்கொடை சுமார் ரூ.20 இலட்சத்திற்கு மேல் உள்ளதால், தனியருக்கான தற்காலிக ஓய்வூதியத்தை 01.08.2025 முதல் ஓய்வூதியத்தில் 1/3rd சதவீதம் வழங்கலாம் என ஆணையிடப்பட்டு அதன்படி தனியருக்கு மாதம் ரூ.30,800/— வீதம் 01.08.2025 முதல் 31.01.2026 வரையிலான காலத்திற்கு நிலுவைத்தொகை ரூ.2,93,784/— மற்றும் 01.02.2026 முதல் 1 வருட காலத்திற்கு தற்காலிக ஓய்வூதியம் அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.
- மனித வள மேம்பாட்டு துறையின் கடித எண் 7399/FR3 Spl./2025 நாள் 09.10.2025—ன்படி, ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்தாலும், தற்காலிக ஓய்வூதியம் வழங்குவதற்கும் மற்றும் ஓய்வூதிய விதிகள், 1978, துணை விதிகள் 60—ல் ஓய்வூதியத்திற்கு மிகாமல் ஓய்வூதியம் வழங்க வகைப்படுத்தப்பட்டுள்ளது.

- தனியரின் ஈட்டிய விடுப்பு மற்றும் சொந்த அலுவல் பேரிலான ஈட்டா விடுப்பினை வழங்க கோப்பினை நடவடிக்கை எடுக்கையில், அதில் நிதி ஆலோசகர், மத்திய கணக்கு குழுமம், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் கருத்துருவின்படி தனியார் மீது சுமத்தப்பட்ட துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை 17 (b) தமிழ்நாடு ஒய்வூதிய விதிகள், 1978 விதி எண் 9–ன் வரையறுக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி தொடரும் என குறிப்பிடப்பட்டுள்ளதால், மேற்கண்ட அரசு கடிதத்தின்படி தனியருக்கு ஒய்வு கால பணப்பயன்களான ஈட்டிய விடுப்பு மற்றும் சொந்த அலுவல் பேரிலான ஈட்டா விடுப்பு பெற தகுதியுடையவராகிறார் என தெரிவிக்கப்பட்டதால், மண்டலம் 1–ன் மூலம் உதவி ஆணையர் (முதுநிலை) அவர்களின் செயல்முறை ஆணை எண் மஅ1 ந.க. எண் அ1/4877/2025 நாள் 22.06.2026–ல் தொகை ரூ.16,29,100/– வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இத்தொகையினை ஒரு மாதத்திற்குள் தனியரின் வங்கிக் கணக்கிற்கு RTGS / NEFT மூலம் வரவு வைக்கப்படும்.
- திரு. என். முருகவேல், செயற்பொறியாளர் (ஒய்வு) அவர்களின் தற்போது முன்பண நிலுவை தொகை ரூ.25,77,548/– மற்றும் தணிக்கை தடை தொகை ரூ.57,394/– நிலுவையில் உள்ள நிலையில் தமிழ்நாடு (குடிமை பணிகள்/ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 17 (b)–ன் கீழ் குற்றச்சாட்டு நிலுவையில் உள்ளதாலும் இவ்வனைத்தும் தனியரால் நிவர்த்திக்கப்பட்டு அரசின் இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டவுடன், தமிழ்நாடு அரசின் விதிகளுக்கு உட்பட்டு சம்பந்தப்பட்ட துறை தலைவர்களின் ஒப்புதல் பெற்று முழு ஒய்வூதியம் (Pension) மற்றும் இறப்புக் கால ஒய்வூதிய பணிக்கொடை (DCRG) வழங்கப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.''.

8. மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையர் (பொ) மற்றும் உதவி ஆணையர் (முதுநிலை) ஆகியோரின் அறிக்கைகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் கண்காணிப்பாளர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகம் பொதுத் துறை (ஒய்வூதியம்) கண்காணிப்பாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம்–1ல் செயற் பொறியாளராக பணியாற்றும்போது தணிக்கை தடைகள் மற்றும் முன்பணம் நிலுவை காரணமாக மனுதாரர் மீதான ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகம் இன்றி வயது முதிர்வின் காரணமாக 29.02.2024 அன்று பணி ஒய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டார் என்பதும், மனுதாரர் மீதான ஒழுங்கு நடவடிக்கை விதி 17(b)ன்படி வழங்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக விளக்கம் மற்றும் கூடுதல் விளக்கம் சமர்ப்பித்தும், இந்நிகழ்வில் இறுதி ஆணை வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது என்பதும், மனுதாரர் ஒய்வு பெற்று 29 மாதங்கள் கடந்துள்ள நிலையில், இதுநாள் வரை எவ்வித நடவடிக்கையும் சரிவர மேற்கொள்ளாமல், தன் மீதான தணிக்கை தடை மற்றும் முன்பணம் நிலுவை தீர்வு செய்யப்படாத ரூ.49,23,942/–னை பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கில் செலுத்தினால் மட்டுமே, தற்காலிக ஒய்வு ஊதியம், இதரப் பணப் பயன்கள் வழங்குவது குறித்து பின்னர் பரிசீலிக்கப்படும் எனவும், மேற்காணும் தொகையினை செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது என்பதும், மேற்காணும் முன்பணம் நிலுவைத் தொகை தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சியிடம் 2020ம் ஆண்டு எல்லா பட்டியல் ஆவணங்களும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டது என்பதும், முன்பணம் நிலுவைத் தொகையான ரூ.58,54,985/– இலட்சத்தில் ரூ.48,21,985/– இலட்சம் தீர்வு செய்யப்பட்டு மீதம் ரூ.10,33,000/– இலட்சம் என்று கணக்கீடப்பட்டுள்ளதாக தற்போது

மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது என்பதும், தற்போது Provisional Pension வழங்குவதற்கு மட்டுமே அனுமதி தனக்கு அளித்துள்ளார்கள் என்பதும், ஆனால் முழு ஒய்வூதியம் பெற தகுதி உடையவர் ஆவார் என்பதும், ஈட்டிய மற்றும் ஈட்டா விடுப்பு ஒப்படைப்பு பணப்பயன்கள் வழங்கப்படவில்லை என்பதும், எனவே, ஒய்வூதியம், ஈட்டிய விடுப்பு மற்றும் ஈட்டா விடுப்பு, பணிக்கொடை ஆகியவற்றை சார்ந்த பணப்பயன்கள் உடனே மனுதாரருக்கு வழங்கிட பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, செயற்பொறியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. N. முருகவேல் என்பவருக்கு பொது வருங்கால வைப்பு நிதியிலிருந்து 90% தொகையாக ரூ.7,56,730/—னை விடுவிக்கப்பட்டது என்பதும், அவர் மீது தணிக்கை தடை பத்திகள் சார்ந்த தொகை மற்றும் அலுவலக சார்ந்த முன்பணத் தொகை ரூ.49,23,942/— ஆகியவை நேர் செய்யப்படாமல் நிலுவையில் இருந்ததால் தனியர் மீது சுமத்தப்பட்ட துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை, தமிழ்நாடு குடிமை பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 17(b)ன் வரையறுக்கப்பட்டுள்ள முறைகளின்படி தொடரும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் 2022—2023 மற்றும் 2023—2024 ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர் தான், தணிக்கைத் தடை பத்திகள் / முன்பண தொகைகள் ஏதேனும் தனியரை சார்ந்தது என்பது தெரியவரும் பட்சத்தில், அதற்கும் தனியரை முழு பொறுப்பாக்கி, தனியருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய பணப்பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், மனுதாரரை 29.02.2024 அன்று பிற்பகல் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியிலிருந்து விடுவித்து ஆணை வழங்கப்பட்டது என்பதும், மனித வள மேம்பாட்டு துறையின் கடித எண் 7399/FR3 Spl./2025 நாள் 09.10.2025—ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரால் வெளியிடப்பட்ட ஆணையில், தனியாரால் நேர்வு செய்யப்படாமல் நிலுவையில் உள்ள முன் பணத் தொகை ரூ.25,77,548/— தனியருக்கு அளிக்கப்பட வேண்டிய பணிக்கொடை சுமார் ரூ.20 இலட்சத்திற்கு மேல் உள்ளதால், தனியருக்கான தற்காலிக ஓய்வூதியத்தை 01.08.2025 முதல் ஓய்வூதியத்தில் 1/3$^{rd}$ சதவீதம் வழங்கலாம் என ஆணையிடப்பட்டு அதன்படி தனியருக்கு மாதம் ரூ.30,800/— வீதம் 01.08.2025 முதல் 31.01.2026 வரையிலான காலத்திற்கு நிலுவைத்தொகை ரூ.2,93,784/— மற்றும் 01.02.2026 முதல் 1 வருட காலத்திற்கு தற்காலிக ஓய்வூதியம் அனுமதித்து ஆணையிடப்பட்டது என்பதும், மற்றும் மண்டலம் 1—ன் மூலம் உதவி ஆணையர் (முதுநிலை) அவர்களின் 22.06.2026 நாளிட்ட செயல்முறை ஆணையின் படி, ஈட்டிய விடுப்பு மற்றும் சொந்த அலுவல் பேரிலான ஈட்டா விடுப்பிற்கான தொகையான ரூ.16,29,100/—னை மனுதாரருக்கு வழங்க ஆணையிடப்பட்டது என்பதும், இத்தொகையினை ஒரு மாதத்திற்குள் தனியரின் வங்கிக் கணக்கிற்கு RTGS / NEFT மூலம் வரவு வைக்கப்படும் என்பதும், மனுதாரரின் தற்போது முன்பண நிலுவை தொகை ரூ.25,77,548/— மற்றும் தணிக்கை தடை தொகை ரூ.57,394/— ஆகியவை நிவர்த்திக்கப்படாமல் நிலுவையில் உள்ளதாலும் மற்றும் தமிழ்நாடு குடிமை பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 17 (b)—ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் நிலுவையில் உள்ளதாலும், இவ்வனைத்தும் தனியரால் நிவர்த்திக்கப்பட்டு அரசின் இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டவுடன், தமிழ்நாடு அரசின் விதிகளுக்கு உட்பட்டு சம்பந்தப்பட்ட துறை தலைவர்களின் ஒப்புதல் பெற்று முழு ஓய்வூதியம் (Pension) மற்றும் இறப்புக் கால ஓய்வூதிய பணிக்கொடை (DCRG) வழங்கப்படும் என்பதும் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1—ன் உதவி ஆணையர் (பொ) மற்றும் உதவி ஆணையர் (முதுநிலை) ஆகியோரின் அறிக்கைகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1—ன் கண்காணிப்பாளர்

மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகம் பொதுத் துறை (ஓய்வூதியம்) கண்காணிப்பாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம்–1ல் செயற் பொறியாளராக பணியாற்றும்போது முன்பணம் நிலுவை மற்றும் தணிக்கை தடைகள் காரணமாக, ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகம் இன்றி வயது முதிர்வின் காரணமாக 29.02.2024 அன்று பணி ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்ட மனுதாரருக்கு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் கண்காணிப்பாளர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகம், பொதுத் துறை (ஓய்வூதியம்) கண்காணிப்பாளர் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, ஈட்டிய விடுப்பு மற்றும் சொந்த அலுவல் பேரிலான ஈட்டா விடுப்பு ஆகியவற்றிக்கான ஒப்பளிப்பு தொகை ரூ.16,29,100/–னை (ரூபாய் பதினாறு இலட்சத்து இருபத்து ஒன்பதாயிரத்து நூறு மட்டும்) ஒரு மாதத்திற்குள் மனுதாரருக்கு வழங்குவதற்கும், நிவர்த்தி செய்யாமல் நிலுவையில் உள்ள முன்பண தொகை மற்றும் தணிக்கைத் தடை மற்றும் தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 17 (b)–ன் கீழ் குற்றச்சாட்டு ஆகியவை தனியரால் நிவர்த்தி செய்யும்பட்சத்தில், விதிகளுக்குட்பட்டு மனுதாரருக்கு முழு ஓய்வூதியம் மற்றும் இறப்பு கால பணிக் கொடை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. நா. முருகவேல்,
செயற் பொறியாளர் (ஓய்வு),
கதவு எண் 140/41, VGP சாலை,
சைதாப்பேட்டை (மேற்கு), சென்னை–600 015.

(2) ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

(3) உதவி ஆணையாளர் (GD & Personnel),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(4) உதவி ஆணையர், மண்டலம் 1,
பெருநகர சென்னை மாநகராட்சி, திருவொற்றியூர்,
சென்னை 600 019.

(5) கண்காணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

<u>நகல் :</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

27/8/26
செயலாளர்.